விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், செம்மேடு கிராமம் மற்றும் செம்மேடு ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. P.நீலாவதி பஞ்சாட்சரம்

ந.க.எண். / 02 /2024 நாள் : 07-02-2024

பொருள் : உத்தேச குடியிறுப்பு மனைப்பிரிவு - விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், செம்மேடு ஊராட்சி வீரமநல்லூர் கிராமம், புன்செய் சர்வே எண்கள். 50/4A3, 50/4A4, 50/5A, 50/5C, 50/6, 54/5B1, 54/5B2, 54/5B3, 54/6B ஏக்கர் 1.16 செண்ட் (அல்லது) 4706 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வெற்றிவேலன் நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் வழங்குதல் குறித்து.

பார்வை :

1. மனுதாரர் திரு. பன்னீர்செல்வம், திருவண்ணாமலை அவர்களின் விண்ணப்ப நாள் : 27-01-2024.
2. அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 04-05-2017
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக இணையதள விண்ணப்பம் ROC No. 4PELMQ81/2024 TCP
   நாள் : 20-01-2024 ம.வ./ந.ஊ.உ.இ.(வி.மா) எண்.09/2024 (இணையதள ஒப்புதல்)
4. சார்பதிவாளர் பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம் தான ஆவண எண். 09/2024
   நாள் : 03-01-2024
5. கூராய்வு கட்டணம் செலுத்துக் கணக்கு எண். 7392977817 -இல் ரூ.22,000/- நாள் : 03-02-2024, நிலப்பயன் மாற்றுக் கட்டணம் செலுத்தி ரசீது எண். 2024 031109
   நாள் : 03-02-2024

*********

உத்தரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், செம்மேடு ஊராட்சி வீரமநல்லூர் கிராமம், புன்செய் சர்வே எண்கள். 50/4A3, 50/4A4, 50/5A, 50/5C, 50/6, 54/5B1, 54/5B2, 54/5B3, 54/6B ஏக்கர் 1.16 செண்ட்

(அல்லது) 4706 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வெற்றிவேலன் நகர் குடியிருப்பு மனைப்பதிவு பார்வை 1 மற்றும் 3–ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2 மற்றும் 3–ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது.

பார்வை 4–ல் சுட்டியபடி சாலை, மூளை முடுக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தான பத்திர ஆவண எண். 09/2024 நாள் : 03–01–2024 உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தான பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பார்வை 3–ல் சுட்டியபடி பார்வை 5–ல் சுட்டியபடி கூராய்வுக்கட்டணம் மனைக்கு ரூபாய் 1000/– வீதம் 22 மனைகளுக்கு ரூ.22,000/– மற்றும் நிலப்பயன் மாற்றி கட்டணமாக நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பில் 3% க்கு ரூ.27,840/– உத்தேச மனைப்பிரிவிற்குண்டான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி செம்மேடு ஊராட்சி மன்ற தீர்மான எண்.69/2024 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவைத்துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு :

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

P. Neelavathi

ஊராட்சி மன்ற தலைவர்,
தலைவர்,
செம்மேடு ஊராட்சி
செஞ்சி ஊராட்சி ஒன்றியம்
விழுப்புரம் மாவட்டம் – 604 153

பெறுதல் :

பன்னீர்செல்வம்,
த/பெ. மணி முதலியார்,
நெ.24/29A, திருநாவுக்கரசு தெரு,
திருவண்ணாமலை,
திருவண்ணாமலை மாவட்டம்.